**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருN.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24 ஆம் நாள் வியாழகிழமை</u>

**<u>இ.ம.எண்.06/2023 இன் அ.வ.எண்.332/2015</u>**

1) தேவராஜ்
2) சிவராஜ்
3) அன்பழகன் ... மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகள்

/ எதிர் /

1) K.சேகர் ... எதிர்மனுதாரர்/வாதி

2) விஸ்வநாதன்
3) லோகநாதன்
4) சிவசுப்பிரமணியன்
5) முத்துச்சாமி
6) நடராஜ் ... எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 22.08.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முரளி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**<u>ஆணையுரை</u>**

மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகளும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் தவிர்த்து 2 முதல் 6 எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய ஆட்களோ காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவில்களில் சட்டத்திற்கு புறம்பாக நுழைந்து தன்னிச்சையான விழா நடத்தவோ மற்றும் கோவில் நிர்வாகத்தை

தலையிடவோ கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சங்கதிகளின் சுருக்கம்</u> :**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 2 முதல் 6 பிரதிவாதிகள் ஆவார். மனுச்சொத்தானது 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கும், மனுதாரர்களுக்கும் தாத்தாவான சுப்பைய தேவர் என்பருக்கு கடந்த 22.09.1945 ம் தேதியிட்ட தனது சகோதரர் ராமசாமி தேவர் உடன் ஏற்படுத்திக்கொண்ட பாகசாசன பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்கண்ட பாகப்பத்திரத்தில் சி அட்டவணையாக குறிப்பிடப்பட்ட சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மேற்கண்ட கிராமத்தில் உள்ள காமாட்சியம்மன், மெய்யம்மன் மற்றும் விநாயகர் கோவில்களை பராமரித்து வரவேண்டியது என கண்டுள்ளது. மேற்படி சுப்பையதேவரும், அவருடைய மக்களும் கடந்த 04.04.1959 ம் தேதி செய்துகொண்ட பாகப்பத்திரத்தில் கோயில் பராமரிப்பிற்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் 'இ' அட்டவணையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 'இ' அட்டவணை சொத்துக்கள் தான் மனுசொத்துக்கள் ஆகும்.

**2.2)** மேற்படி கோவிலைப் பொறுத்து சுப்பையா தேவர் கடந்த 30.05.1955 அன்று இந்து சமய அறநிலைத்துறைக்கும் எதிராக அ.வ.எண்.42/1955 என்ற வழக்கு தொடர்ந்து, மேற்படி கோவிலுக்காக விடப்பட்ட பூமி வகையறா சொத்துக்கள் மற்றும் ஊரில் உள்ள கோயில்கள் தனக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் உரிமையானது என்றும், இந்து சமய அறநிலைதுறைக்கோ மற்ற வாரிசுகளுக்கோ எந்த சம்பந்தமும் இல்லை என்றும், தன்னுடைய வாரிசுகளுக்கு மட்டுமே அதை வழிநடத்தி வருவதற்காகவும், ஒரு உத்தரவு பெற்று இதுநாள்வரை மேற்கண்ட உத்தரவு எந்தவித மாற்றமுமின்றி

நிலுவையில் இருந்துவருகிறது. கோவை இந்து அறநிலைய துணை கமிசனர் அவர்களிடம் தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில், மேற்கண்டவாறு சுப்பைய தேவர் 1945ம் வருட பத்திரப்படி தன் வசம் இருந்த சொத்துகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தைக் கொண்டு கோயில்கள் புதுப்பித்ததால், அவருடைய வாரிசுகள் தவிர வேறு யாருக்கும் எந்தவித பாத்தியமும், உரிமையும் இல்லை என்று சுப்பைய தேவருக்கே தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதாக உத்தரவு பெற்றுள்ளார்.

**2.3)** 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் சுப்பையாதேவர் அண்ணன் ராமசாமி தேவரின் மகன்களும், பேரன்களும் ஆவார்கள். சுப்பையாதேவர் மேற்படி கோவிலை நிர்வகிக்க அவரது வழிவந்த வாரிசுகளை மட்டுமே நிர்வாகம் செய்ய அனுமதித்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளர். கடந்த 1959ம் தேதிய பாகசாசனப்படி சுப்பையா தேவர் அவரது மூன்று ஆண் வாரிசுகளான கன்னிமுத்து தேவர், சண்முக தேவர் மற்றும் காமாட்சி தேவர் ஆகியோர்கள் தலா ஒரு வருடம் முறை வைத்து மேற்படி கோயில்களை பராமரித்து நிர்வாகம் செய்து வரவேண்டும். மேற்படி ஆவணத்திலேயே சுப்பையா தேவர் தனது பெண் வாரிசுகளை மேற்படி கோயில்களில் நிர்வாகப் பொறுப்பில் சேர்க்கவில்லை.

**2.4)** சுப்பையாதேவரின் மகன் கன்னிமுத்து தேவருக்கு 1ம் எதிர்மனுதாரரும், ராஜு என்பவரும் வாரிசுகளாவர். சண்முக தேவருக்கு மனுதாரர்களான 6 முதல் 8 பிரதிவாதிகளே வாரிசுகள். சுப்பையதேவரின் மற்றொரு மகனும், மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் சித்தப்பாவான காமாட்சி தேவருக்கு யாதொரு வாரிசுகளும் இல்லை. அவரது மறைவுக்கு பிறகு 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான கன்னிமுத்து தேவர் என்பவரே அவரது ஒருவருட கால நிர்வாக பொறுப்பையும் சேர்த்து கவனித்து வந்தார். அந்தவகையில் 1ம் எதிர்மனுதாரருக்கு இரண்டு வருட கால பராமரிப்பும், நிர்வாக

பொறுப்பும் வந்துள்ளது. மேலும், கன்னிமுத்துதேவரின் மற்றொரு வாரிசான ராஜு என்பவரின் உடல்நிலை காரணமாகவும், வெளியூரில் இருப்பதாலும் அவருக்கு பதிலாக 1ம் எதிர்மனுதாரரை நிர்வாகம் செய்துகொள்ள அனுமதித்துள்ளார்கள்.

**2.5)** மேலும், கோவிலில் சாமி தரிசனம் செய்ய வேண்டாம் என்றோ, 2 முதல் 6 எதிர்மனுதாரர்களை வரவேண்டாம் என்றோ எந்த விதத்திலும் மேற்படி சுப்பையா தேவர் தடுக்கவில்லை. ஆனால் விழா எடுக்கவோ, பொது மக்களிடம் வசூல் செய்யவோ அவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களது முறையில் எவ்வித இடையூறு ஏற்படுத்தகூடாது.

**2.6)** இந்நிலையில் 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தாங்கள் 25.08.2023 தேதியில் விழா எடுப்பதாக அறிவிப்பு அடித்து ஊர் பொது மக்களிடம் வசூல் செய்து வருகிறார்கள். அவ்வாறு அவர்கள் தன்னிச்சையாக விழா எடுக்க எந்தவிதமான உரிமையும், சட்டக்கூறும் இல்லை. மேற்படி 2 முதல் 6 எதிர்மனுதாரர்கிளின் சட்டவிரோத செயலை இந்நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே தடுக்க இயலும். எனவே, மனுதாரர்களும், 1ம் எதிர்மனுதாரரும் தவிர்த்து 2 முதல் 6 எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய ஆட்களோ காமாட்சியம்மன் மற்றும் மெய்யப்பன் கோவில்களில் சட்டத்திற்கு புறம்பாக நுழைந்து தன்னிச்சையான விழா நடத்தவோ மற்றும் கோவில் நிர்வாகத்தை தலையிடவோ கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>2 முதல் 5 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

கடந்த 22.09.1945 தேதியிட்ட பாகசாசனத்தில் சி அட்டவணை

சொத்துக்கள் செல்லப்பம்பாளையத்தில் இருக்கும் விநாயகர் கோவிலுக்கும், காமாட்சியம்மன் கோவிலுக்கும் தர்மத்திற்காக விடப்பட்ட சொத்து. ஆனால் மெய்யம்மன் கோவிலினையும் சேர்த்து இம்மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 22.09.1945 அன்று தேதியிட்ட பாகப்பத்திரதின்படி க.ச.எண்.158 பூமியில் பு.ஏ.9.50 விஸ்தீரணமுள்ள பூமி மற்றும் மேற்படி பூமியில் உள்ள 21 புளிய மரங்கள் நிலவி வர வேண்டும். ஆனால், 1ம் எதிர்மனுதாரரும், மனுதாரர்களும் இணைந்து வஞ்சகக் கூட்டு சேர்ந்துகொண்டு தர்மத்திற்காக விடப்பட்டிருக்கும் சொத்து என்று கூட பாராமல் வில்லங்கப்படுத்தியும், பாராதீனம் செய்துவிட்டனர்.

**3.2)** மனுதாரர்கள் மனுவில் கூறுவது போல் சுப்பையா தேவர் மேற்படி கோவில் தனக்கும், தன் வாரிசுகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டதென அ.வ.எண்.42/1955 என்ற வழக்கிலோ, கோவை இந்து அறநிலைத்துறை துணை கமிஷனர் அவர்களிடமோ எந்த உத்தரவும் பெறவில்லை. மேலும், கடந்த 1945 தேதிய பாகசாசனத்திலும் சுப்பைய தேவரின் வாரிசுகள் மட்டும் மேற்படி கோயில்குண்டான பூஜைகள், உற்சவங்கள் மற்றும் விழக்கள் ஆகியவற்றை வம்ச பரம்பரையாக செய்து கொள்ள வேண்டியது என்ற வாசம் கண்டு எழுதவில்லை.

**3.3)** மேற்படி கோவிலானது அகமுடையார் சமூகத்தின் (முக்குந்தர் குலம்) 65 பங்காளிகள் அடங்கிய பொது மக்களுக்கு மட்டுமே பாத்தியபட்ட குலதெய்வ கோயிலாகும். மேற்படி கோவிலில் ஒவ்வொரு வருடமும் பொது மக்களால் விழா எடுக்கப்பட்டு அனைவரது பங்களிப்பு வாயிலாக மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதனை மனுதாரர்கள் உட்பட எவரும் இதுவரை தடுத்திடவும் இல்லை, எதிர்காலத்திலும் தடுத்து நிறுத்திடவும் இயலாது. மேற்படி சங்கதி குறித்து இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.912/2015 மனு இறுதி உத்தரவில் தெளிவுபட கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்களால்

நடத்தப்படும் விழாக்களை தடை செய்ய மனுதாரர்களுக்கு சட்டத்தில் வழிவகையில்லை. இறைவழிபாடுகளில் ஒன்றான விழா எடுத்தல் எவருக்கும் எந்தவிதத்திலும் இடைஞ்சலாக இருக்காது.

**3.4)** மேலும், அவசியதரப்பினர்களான செல்லப்பம்பாளையம் கிராமம் இந்து அகமுடையார் சமூக முக்குந்தர் குல மக்கள் 65 நபர்களை கட்சிசேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த இ.ம.எண்.912/2015 தள்ளுபடி செய்யப்பட்டு, பின்னர் சார்பு நீதிமன்றத்தில் C.M.A.5/2018 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனு நிலுவையில் இருந்த சமயத்தில் ஒவ்வொரு மாதமும் அமாவாசை நாளில் கோவிலுக்குள் இருக்கும் பாம்பு புற்றிற்கு குல மக்களால் ஒரு மண் பாத்திரத்தில் பால் ஊற்றி வைப்பது வழக்கம். அதை பொறுக்காத 1ம் எதிர்மனுதாருடன் இருந்த ஒரே பங்காளியான ஆறுமுகம் என்பவர் மேற்படி மண்பாத்திரத்தை எடுத்து தொடர்ந்து உடைத்து வந்தார். 4 மாத காலவரையறைக்குள் அவ்வாறு உடைத்த நாளில் ஒரே பாம்பானது இருமுறை கடித்து கோவிலுக்கு முன்பாகவே இறந்தார்.

**3.5)** அதன்பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரர் மேற்படி மேல்முறையீட்டை திரும்பி பெற்றுக்கொள்வதாக கூறி மேற்படி மேல்முறையீடானது (not pressed) தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பின்னட்டு இவ்வழக்கையும் 1ம் எதிர்மனுதாரர்/வாதி திருப்பி பெற்றுக்கொள்வதாக கூறிவிட்டு, தற்போது மனுதாரர்கள் வாயிலாக இப்பொயான மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**6)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**7) <u>பிரச்சினை</u>** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. மனுதாரர்கள் தரப்பில் **ம.சா.ஆ.1** வது ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.5** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பிலும் எடுத்துக்கரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், கடந்த 22.09.1945 தேதியிட்ட பாகப்பத்திரப்படி அதில் கண்ட 'சி' அட்டவணை சொத்து விநாயகர் கோவில் மற்றும் காமாட்சியம்மன் கோவிலுக்கு என்று ஒதுக்கப்பட்டது என்றும், அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்து வழக்கு 'இ' அட்டவணை சொத்து என்றும், அந்த 'இ' அட்டவணை சொத்தை மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் தாத்தாவான சுப்பையாதேவரின் சுவாதீனத்தில் விடப்பட்டு அந்த சொத்தை சுப்பையாதேவர் எவ்வித வில்லங்க பாராதீனத்திற்கும் உட்படுத்தாமல் அதில் வரும் வருவாயை கொண்டு மேற்படி கோவில்களுக்கு பூஜை மற்றும் உற்சவம் போன்ற நிகழ்வுகளை செய்துவரவேண்டும் என்பது மனுதாரர்கள் தரப்பு வழக்காகும். 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்கண்டவாறு பாகம் ஏற்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டாலும், மேற்கண்ட கோவில்கள் மனுதாரர்களின் தாத்தா சுப்பையாதேவருக்கும் மட்டும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதல்ல என்று எதிர்வாதம் வைத்துள்ளார்கள்.

**9)** வழக்குரை 7 வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 22.09.1945 தேதியிட்ட பாகப்பத்திரத்தை பரிசீலனை செய்கையில், பழனித்தேவரின் மகன்களான ராமசாமித்தேவர் மற்றும் சுப்பையாதேவர் ஆகிய இருவரும் பாகம் செய்து கொண்டுள்ளதும், அதில் ஏ அட்டவணை சொத்து ராமசாமி தேவருக்கும், பி அட்டவணை சொத்து சுப்பைய தேவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்பு தங்களுக்கள்ளேயே சி அட்டவணை சொத்து விநாயாகர் கோவில் மற்றும் காமாட்சியம்மன் கோவிலுக்கு என்று ஒதுக்கீடு செய்து கொண்டதாக தெரியவருகிறது. அந்த சி அட்டவணை சொத்து விநாயகர் கோவிலுக்கும், காமாட்சியம்மன் கோவிலுக்கும் தர்ம காரியத்திற்காக விடப்பட்டுள்ளதால், மேற்படி சுப்பையாதேவர் அந்த சி அட்டவணை சொத்தை தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு மேற்படியாரும் அவருடைய வாரிசுகளும் வம்ச பரம்பரையாக மேற்படி சொத்தை யாதொரு பாராதீனத்திற்கும், வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் அனுபவித்து, மேற்படி சொத்திலிருந்து கிடைக்ககூடிய வருட வருமானத்தில் இருந்து மேற்படி இரண்டு கோவில்களுக்கும் பூஜை, உற்சவம் வகையறா நடத்தி கொண்டு வரவேண்டியது என கண்டு எழுதப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதன்படி சுப்பையதேவரின் வாரிசுகளான மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு மேற்படி கோவிலை பராமரிக்கவும், பூஜை மற்றும் உற்சவம் நடத்த பாத்தியம் உள்ளது என்பது தெரியவருகிறது.

**10)** ஆனால், மேற்படி காமாட்சியம்மன் கோவிலும், மெய்யம்மன் கோவிலும் மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் தாத்தா சுப்பையா தேவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்கிற வகையில் எவ்வித வாசகங்களும் மேற்படி வழக்குரை ஆவணம் 7–ஆன பாகப்பத்திரத்தில் காணப்படவில்லை. மேற்படி மனுதாரர்களின் தாத்தாவான சுப்பையாதேவர் மேற்படி காமாட்சியம்மன் கோவில் மற்றும் மெய்யம்மன் கோவிலை அவரின் தனிப்பட்ட கோவில்கள் என்று விளம்புகை செய்ய கோரி துணை ஆணையர், இந்து அறநிலைத்துறை முன்பு

O.A.42/1955 என்ற வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கு சுப்பையாதேவர் சார்பாக தீர்ப்பாளிக்கப்பட்டது என மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மட்டுமே வழக்குரை 2வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை பரிசீலனை செய்கையில், கோவை துணை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, *Madras Hindu Religious and Charitable Endowments Act, 1951* –ன் பிரிவு 6 (17)ல் கூறப்பட்ட கோவில்கள் என்ற வரையறைக்கு உட்படாத ஆலயங்கள் மேற்படி காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் ஆலயங்கள் என்று விளம்புகை செய்யப்பட்டுள்ளதே தவிர, சுப்பையாதேவருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட கோவில் என்று விளம்புகை செய்யப்படவில்லை. மேலும், மேற்கண்ட வழக்குரை 2வது ஆவணமான தீர்ப்பாணையை மட்டும் வைத்து மேற்படி கோவில்கள் சுப்பையதேவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று தற்போது இந்நீதிமன்றத்தால் முடிவிற்கு வர இயலாது.

**11)** எனினும், வழக்கு சொத்திலிருந்து வரும் வருமானத்தை கொண்டு மேற்படி கோவில்களுக்கு பூஜை செய்வதற்கும், உற்சவம் போன்ற திருவிழாக்கள் நடத்துவதற்கும் சுப்பையதேவரின் வாரிசுகளான மனுதாரர்கள்/6 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கும், 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கும் உரிமையுள்ளது. மேலும், வழக்குரை ஆவணம் 6 ஆனது காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் திருக்கோவில் உற்சவ அழைப்பிதல் ஆகும். அதை பரிசீலனை செய்கையில் மனுதாரர்களின் தகப்பனார் சண்முகதேவரும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் மற்றும் விழா குழுவினரும் சேர்ந்து மேற்படி வழக்குரை ஆவணம் 6 விழா அழைப்பிதலை அச்சடித்து மேற்படி கோவில்களுக்கான உற்சவ விழாவை நடத்தியுள்ளது தெரியவருகிறது. மேலும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவு கணக்கு பதிவேடு எ.ம.சா.ஆ.5–ஐ பரிசீலனை செய்கையில், மனுதாரர்களும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் சேர்ந்து

மேற்படி விழாக்களை நடத்தியுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்துவந்த நிலையில் இம்மனுதாரர்கள் தங்களை தரப்பினர்களாக கட்சிசேர்க்க கோரி இ.ம.எண்.02/2022 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு, 6 முதல் 8 பிரதிவாதிகளாக கட்சிசேர்க்கப்பட்டுள்ளனர். ஆகவே, 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்த இ.ம.எண்.912/2015 பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மனுதாரர்களுது கோரிக்கைக்கு முரண்தடையாக அமையாது.

**12)** ஆகவே, மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/வாதியை சேர்க்காமல், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மட்டும் தன்னிசையாக காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவில்களின் உற்சவ விழாக்களை நடத்தக்கூடாது என்று இம்மனுவை அனுமதிப்பதற்கு முதல்நோக்கு வழக்கும், சமநிலை வாய்ப்பும் மனுதாரர்கள் சார்பாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகளையும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியையும் சேர்க்காமல் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய ஆட்களோ தன்னிசையாக காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவில் விழாவை நடத்த கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2023ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.08.24 19:18:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

<u>மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>:

– இல்லை –

<u>மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் </u>:

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | | அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன், ஸ்ரீ மெய்யம்மன் திருக்கோயில் திருக்கல்யாண உற்சவ விழா அழைப்பிதழ் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>:

– இல்லை –

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் </u>:

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | மேற்படி கோவில் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு |
| எ.ம.சா.ஆ.2 | | மனுச்சொத்து சம்பந்தமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு |
| எ.ம.சா.ஆ.3 | | புல எண்.179–க்கான நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் கணக்கு பதிவேட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.4 | | அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன், ஸ்ரீ மெய்யம்மன் திருக்கோயிலில் திருவிழா நடைபெற்றதற்கான உற்சவ அழைப்பிதழ்கள் |
| எ.ம.சா.ஆ.5 | | செல்லப்பம்பாளையம் – காபிலி பாளையம் அருள்மிகு காமாட்சியம்மன் – மெய்யம்மன் கோவில் வரவு செலவுத் கணக்கு பதிவேடு அசல் |

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.08.24 19:18:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**அசல் ஆணையுரை**

இ.ம.எண்.06/2023 இன் ஒ.எஸ்.332/2015

நாள் : 24.08.2023

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------